STC.No.649/2022 28.07.2026

**DW1 – மலைச்சாமி, த/பெ.பாண்டி**

**புகார்தாரர் ஆஜர்.**

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**புகார்தாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

**1)** நான் எந்த சொத்தை புகார்தாரருக்கு கிரையம் பேசினேன் என்றால் இலந்தைகுளத்தில் எனக்கு பாத்தியப்பட்ட சொத்தை கிரையம் பேசினேன். அந்த கிரையத்தின்படி 26.03.2018–ம் தேதி நானும், புகார்தாரரும் முழு சம்மதத்துடன் கிரைய ஒப்பந்தம் செய்துகொண்டோம் என்றால் சரிதான். அந்த ஒப்பபந்தத்தின்படி 1 செண்ட்க்கு ரூ.5 லட்சம் என்று பேசிக்கொண்டோம் என்றால் சரிதான். அன்றைய தினமே புகார்தாரர் அந்த ரூ.5 லட்சத்தை முன்பணமாக எனக்கு கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். நான் அன்றைய தினம் இடத்தை விற்பதற்கு அனுமதி வாங்காததால் இரண்டு மாத காலத்திற்குள் அனுமதி பெற்று கிரையம் செய்து தருவதாக ஒப்புக்கொண்டேன் என்றால் சரிதான். அதன் பின்னர் 12.04.2018–ம் தேதி மற்றும் 12.05.2018–ம் தேதி ஆகிய நாட்களில் தலா ரூ.2 லட்சம் என்று புகார்தாரரிடம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். அதை பெற்றுக்கொண்டதற்காக என்னிடம் காட்டப்படும் பு.த.சா.ஆ.2–ல் நான் கையொப்பம் மற்றும் மேற்குறிப்பு செய்துள்ளேன் என்றால் சரிதான்.

2) அந்த ஒப்பந்தம் பு.த.சா.ஆ.2–ல் யார் யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் மீனாட்சிசுந்தரத்தின் மகன் மற்றும் ரவிச்சந்திரனின் மகன் கையொப்பம் செய்துள்ளார்கள். அந்த

ஒப்பந்தத்தின்படி 3-ம் பக்கத்தில் தவறியவர்கள் தவறாதவர்கள் கூறும் சகல நஷ்டத்திற்கு கடமைப்பட்டவர்கள் ஆவார்கள் என்று இரு தரப்பினர்களும் பேசி ஒப்புக்கொண்டு எழுதிகொண்டதாக உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்தில் எத்தனை பிளாட் உள்ளது என்றால் 6 பிளாட். அந்த 6 பிளாட்டுகளில் முதல் கிரையம் யாருக்கு செய்து கொடுக்கப்பட்டது என்றால் 2018-ம் வருடம் அனுமதி பெற்ற பின்னர் பொன்னுச்சாமி என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்தேன். எந்த தேதியில் அரசாங்கத்தில் அனுமதி பெற்றேன் என்றால் 2019-ம் வருடம். அனுமதி பெற்ற பின்னர் பொன்னுச்சாமி என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். இரண்டு மாதத்திற்குள் என்னால் அனுமதி பெற இயலவில்லை என்பதால் தான் புகார்தாரர் பணத்தை என்னிடம் திரும்ப கேட்டார் என்றால் அனுமதி பெற்ற பின்னர் 2019-ம் வருடம் புகார்தாரரை இடத்தை விற்பனை செய்வதற்காக அழைத்தேன், அவரது இடம் சாஸ்தா கிளினிக் அருகே உள்ளது, அது விற்பனை ஆகவில்லை என்பதால் கிரைய முன்பணத்தை புகார்தாரர் திரும்ப கேட்டார்.

3) எந்த மாதம் புகார்தாரரை கிரையம் செய்ய அழைத்தேன் என்றால் 2019-ம் வருடம் மாதம் ஞாபகம் இல்லை. நான் புகார்தாரரை கிரையம் செய்ய அழைக்கவில்லை என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தத்தில் நானும், புகார்தாரரும் தான் கையொப்பம் செய்துள்ளோம், புகார்தாரரின் மனைவி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான், ஒப்பந்தம் செய்ய சொன்னதும் எனக்கு முதலில் ரூ.5 லட்சம் பணமும், பின்னர் ரூ.4 லட்சமும் என்னிடம் கொடுத்தது புகார்தாரர் சேகரின் மனைவி தான், அவரிடம் ரூ.5 லட்சத்தை நான் திரும்ப கொடுத்துவிட்டேன், மீதம் ரூ.4

லட்சம் மட்டும் நான் கொடுக்க வேண்டியுள்ளது. நான் சொன்னது போல் புகார்தாரரின் மனைவியான தேவி பணத்தை பற்றி பேசவில்லை, பணமும் கொடுக்கவில்லை, அதனால் தான் கிரைய ஒப்பந்தத்தில் அவர் சாட்சி கையொப்பம் செய்யவில்லை, அவரது பெயரில் ஒப்பந்தமும் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4) புகார்தாரரின் மனைவியை நீதிமன்றத்திற்கு அழைக்க வேண்டும் என்பதற்காக அவர் தான் பணம் கொடுத்தார் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் 1–வது பத்தியில் 06.03.2018–ம் தேதி நானும், புகார்தாரரும் அவரது மனைவி தேவியும் கிரைய ஒப்பந்தம் செய்துகொண்டதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல் பு.த.சா.ஆ.2–ல் இல்லை என்றால் சரிதான். நான் சொன்னது போல் நானும், புகார்தாரரின் மனைவியும் கிரையம் பேசியிருந்தால் தேவி பெயரில் கிரைய ஒப்பந்தம் செய்திருப்பேன், அவ்வாறு எந்த சம்பவமும் நடக்காததால் தான் கிரைய ஒப்பந்தத்தில் அவரது பெயர் இல்லை, அவர் சாட்சி கையொப்பமும் செய்யவில்லை என்றால் சரியல்ல. தற்போதைய கிரைய ஒப்பந்தத்தில் உள்ள இடத்தின் மதிப்பு எவ்வளவு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அனைத்து பிளாட்டுகளையும் விற்பனை செய்துவிட்டேனா என்றால் சரிதான், 24 செண்ட் எனது மகனின் பெயரில் எழுதி வைத்துள்ளேன். ஒப்பந்தத்தின் போது கொடுத்த ரூ.5 லட்சம் அதன் பின்னர் கொடுத்த ரூ.4 லட்சமும் புகார்தாரர் தான் என்னிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல. அதேபோல் ரூ.2 லட்சம் இரண்டு தவணைகளாக பெற்றதையும் புகார்தாரரின் மனைவியான தேவியிடம் தான் இருந்து பெற்றுக்கொண்டேன் என்று குறிப்பு இல்லை என்றால் சரிதான்.

5) பு.த.சா.ஆ.2–ல் எழுதி அடிக்கப்பட்ட மேற்குறிப்பில் நானும், புகார்தாரரும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த மேற்குறிப்பில் 04.02.2019–ம் தேதி கடைசியில் பாக்கி தொகையை மார்ச் மாதம் கொடுத்து அந்த கிரைய ஒப்பந்தத்தின் 1–வது பத்தி கிரைய ஒப்பந்தத்தை திரும்ப பெற்றுக்கொள்ள வேண்டும் என்று ஒப்புக்கொண்டு இருவரும் கையொப்பம் செய்யவேண்டியது என்று உள்ளது என்றால் சரிதான், புகார்தாரரின் மனைவியான தேவி புகார்தாரரிடம் கையொப்பம் வாங்கி காசோலைகளை திரும்பி தருவதாக சொல்லி சென்றார், ஆனால் கையொப்பம் பெற்று தரவில்லை, காசோலையையும் திரும்ப தரவில்லை.

6) அந்த தேதியில் ரூ.5 லட்சத்திற்கு பதிலாக ரூ.3 லட்சம் கொடுத்ததனால் புகார்தாரர் அதை வாங்க மறுத்துவிட்டார், அதனால் தான் அதில் யாரும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் உண்மையாக ரூ.5 லட்சம் புகார்தாரரின் மனைவிக்கு கொடுத்திருந்தால் அவரது கையொப்பத்தை பெற்றிருப்பேன் என்றால் சரியல்ல. புகார்தாரரின் மனைவி ரூ.5 லட்சம் பெற்றிருந்தால் மேற்குறிப்பு செய்த நபர் சாட்சி கையொப்பம் செய்திருப்பார் என்றால் சரியல்ல. நான் தற்போது வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக ரூ.5 லட்சம் புகார்தாரரின் மனைவி கொடுத்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அன்றையதினம் புகார்தாரர் அங்கு தான் இருந்தார், ஆனால் வழக்கிற்காக அவர் அங்கு இல்லை, அதனால் தான் கையொப்பம் பெறவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் மேற்குறிப்பு செய்த அன்று புகார்தாரர் வேலைக்கு சென்றதனால் புகார்தாரரின் மனைவி பின்னர் கையொப்பம் வாங்கி தருவதாக சொன்னதாக வழக்கிற்காக பொய்யாக

சொல்கிறேன் என்றால் சரியல்ல. அதேபோல் எனது நிரூபண வாக்குமூலத்தில் 04.02.2019–ம் தேதிக்கு முன்னர் புகார்தாரருக்கு காசோலை கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் 04.02.2019–க்கு முன்னர் நான் காசோலை எதுவும் புகார்தாரரிடம் கொடுக்கவில்லை. நான் ஜீன் 2022 2–ம் வாரம் க்கு பின்னர் புகார்தாரர் என்னிடம் பணத்தை திரும்ப கேட்ட பின்னர் தான் இவ்வழக்கு காசோலையை கொடுத்தேன் என்றால் அதற்கு முன்னரே காசோலையை கொடுத்துவிட்டேன். நான் அவ்வாறு காசோலையை கொடுக்கவில்லை, வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7) சாஸ்தா கிளினிக் அருகே இடம் இருந்ததாக ஒப்பந்தம் செய்த காலக்கட்டத்தில் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. புகார்தாரர் என்னுடன் கிரைய ஒப்பந்தம் செய்வதற்கு முன்னரே 2015–ம் வருடம் வேறொரு நபருக்கு கிரைய ஒப்பந்தம் செய்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு சாஸ்தா கிளினிக்கை விற்ற பின்னர் என்னுடன் கிரையம் செய்துகொள்வதாக புகார்தாரர் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் நான் புகார்தாரருக்கு கிரையம் பேசிய சொத்தினை கடந்த 13.05.2020–ம் தேதி ஜெயா, ஆதித்யா, கலைச்செல்வி ஆகியோர்களுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். ஆவண எண்.1502/2020 ஆவணத்தின்படி கிரையம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் புகார்தாரருக்கு தெரியாமல் கிரையம் செய்த பின்னர் புகார்தாரர் என்னிடம் கொடுத்த முன்பணத்தை திரும்ப கேட்டும், நான் அவருக்கு பணத்தை திரும்ப கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, புகார்தாரர் வேண்டாம் என சொன்ன பின்னர் தான் வேறொரு நபருக்கு கிரையம் செய்து கொடுத்தேன். பணத்தை திரும்ப

கேட்டபோது நான் அவர்களிடம் ரூ.100/−க்கு ரூ.1 .50 மாத வட்டியாக திரும்ப தருவதாக ஒப்புக்கொண்டேன் என்றால் சரியல்ல. அதன் பின்னர் 2022−ம் வருடம் வரை பணத்தை வட்டியுடன் திரும்ப செலுத்தாததால் புகார்தாரர் என்னிடம் கேட்டபோது ரூ.13,500/− வீதம் 46 மாத வட்டியாக ரூ.6,21,000/−ல் ரூ.21 ஆயிரம் தள்ளுபடி செய்துகொண்டு ரூ.6 லட்சம் மற்றும் ரூ.9 லட்சம் ஆக மொத்தம் 15 லட்சம் முடிவு செய்து புகார்தாரருக்கு இரண்டு காசோலைகள் கொடுத்தேன் என்றால் சரியல்ல. அந்த காசோலை என்னுடைய காசோலை தான் என்றால் சரிதான், அதில் நான் தான் கையொப்பம் செய்துள்ளேன். ஜீன் 2022, 2−ம் வாரம் கொடுத்த காசோலைகளை காசோலையில் சொல்லப்பட்ட தேதிக்கு பின்னர் வசூலுக்கு செலுத்தினால் பணம் பெற்றுக்கொள்ளலாம் என்று உறுதி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த வழக்கு காசோலைகளை பணத்தை திரும்பி தருவதற்காக தான் கொடுத்தேன் என்றால் ரூ.4 லட்சத்திற்கு பாதுகாப்பாக கொடுத்தேன். நான் ரூ.4 லட்சம் என்று பொய்யாக சொல்கிறேன், ரூ.15 லட்சத்திற்கு காசோலைகளை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் 01.07.2022−ம் தேதி புகார்தாரர் ஒத்தக்கடை ஸ்டேட் பேங்க் வங்கியில் காசோலையை வசூலுக்கு செலுத்தியபோது எனது கணக்கில் போதிய பணம் இல்லை என்று காசோலை திருப்பப்பட்டது என்றால் சரியல்ல, காசோலையை ரூ.4 லட்சத்திற்கு பாதுகாப்பாக தான் கொடுத்தேன், வசூலுக்கு செலுத்த சொல்லவில்லை. நான் வசூலுக்கு செலுத்த சொல்லி தான் கொடுத்தேன், இல்லை என்று தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

8) அதன் பின்னர் 07.07.2022−ம் தேதி காசோலை திருப்பப்பட்ட விபரத்தை வழக்கறிஞர் மூலம் புகார்தாரர் எனக்கு தெரிவித்தார், அதை

நான் வாங்க மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல, அந்த தேதியில் நான் வீட்டில் இல்லை. இந்நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணையை நான் பெற்று வரவில்லை என்றால் சரிதான். இன்றைய தேதி வரை புகார்தாரருக்கு பணத்தை திரும்ப செலுத்த நான் முன்வரவில்லை என்றால் அவர் பெற்றுக்கொண்ட ரூ.5 லட்சத்தை இல்லை என்று மறுத்துள்ளார். புகார்தாரர் பணத்தை வாங்கவில்லை என்பதனால் தான் மறுத்துள்ளார் என்றால் சரியல்ல. நான் புகார்தாரருக்கு ரூ.15 லட்சம் கொடுக்க கடமைப்பட்டவர், அதை கொடுக்க தவறியதனால் இவ்வழக்கில் தண்டிக்கக்கூடிய நபர் என்றால் சரியல்ல.